பிரச்னை எழவில்லை. 1,040 இருக்கைகள் உள்ளன. அதைத் தான் அங்கு வழங்க முடியும். அது தவிர வேறு ஏதாவது குறைகள் இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொன்னால் அதை உடனடியாகக் களைய முயற்சி எடுக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : இந்த கலைவாணர் அரங்கின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதற்கான விடையை இதற்கு முன்பே நான் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். ஒரு ஐந்தாண்டுக் காலக் கணக்கு என்னிடம் இருக்கிறது.

1974–75-ல் ரூ. 5,559 லாபம் வந்திருக்கிறது.

1975–76-ல் ரூ. 47,253 லாபம் வந்திருக்கிறது.

1976–77-ல் ரூ. 46,804 நஷ்டம்.

1977–78-ல் ரூ. 9,558 லாபம்.

1978–79-ல் ரூ. 2,61,096 லாபம்.

[முற்பகல் 9-20]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். கேள்வி கேட்கிறபோது, விவரங்களைத் தான கேட்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் தனிப்பட்டவர் ஒருவர் புண்படுகின்ற முறையில் கேள்வி கேட்கக் கூடாது. உட்காருங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி இல்லை என்கிறேன். உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 பிப்ரவரி 4]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பேரவை. இது கேள்வி நேரம். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், அவர் சில கேள்விகளைக் கேட்கின்ற நேரத்தில், எந்த நோக்கத்தோடு எழுப்பினார்களோ, அந்தக் கேள்வி அவைக் குறிப்பிலே ஏறியிருக்கிறது. அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு அரங்கநாதன் அவர்கள் கேள்வியை நீக்க வேண்டுமென்று சொல்லிவிட்டேன். அமைச்சர் அவர்கள் அதைக் கேட்காமல் இருந்தார்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனியாகக் கொண்டு வாருங்கள். இப்போது உட்காருங்கள். திரு இளங்கோவன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கில் திரைப்படங்களை அனுமதிப்பதால், இலக்கிய விழாக்கள், பொது விழாக்கள் அங்கே நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகின்றது என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விழாக்கள், பொது விழாக்கள், அரசு நிகழ்ச்சிகள் எப்போது வேண்டுமானாலும் நடத்துவதற்கு, உரிமையோடுதான் திரைப்படத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வப்போது விழாக்கள் நடைபெறுகின்ற நிலை வந்தால், அந்தக் காட்சிகள் ரத்து செய்வதற்கான அதிகாரங்களை துறை வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கேள்வி எழவில்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கம் பொது நிகழ்ச்சிகள், விழாக்கள் நடத்துவதற்கு, சென்னை நகரத்திலே மிக முக்கியமான இடத்திலே அமைந்திருப்பதால், அரசியல் கட்சிகளுக்கும், இயக்கங்களுக்கும் அப்பேர்ப்பட்ட விழாக்களை நடத்துவதற்கு தடை உண்டா? அப்படித் தடையிருந்தால், அதைத் தீர்ப்பதற்கு, நீக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு கலை அரங்கம் என்ற அடிப்படையில் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு நடந்து வருகின்றது. ஆகவே, அரசியல் கட்சிகளுடைய நிகழ்ச்சிகளை அனுமதித்தால், மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் அவர்கள் முன்னாலே சொன்னதைப்போல், பல கலை நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள் நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போகலாம். அந்த அடிப்படையில் தான் அது தவிர்க்கப்பட்டிருக்கின்றது.

*வினா எண். 27—திரு. இ. கணேசன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைவாணர் அரங்கம் போன்று சென்னை நகரில் வேறு இடங்களிலும் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் இதே போன்று அரங்கம் கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இல்லை.

(ஆ) மாவட்டத்தின் தலைநகர் அல்லது முக்கிய இடங்களில் கலை அரங்கம் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைநகரங்களில் சில இடங்களில் கலை அரங்கங்கள் நிறுவுவதற்கான உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுபோன்ற கலை அரங்கம் தஞ்சையிலே கட்டுவதற்கான உத்தேசம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அமைப்பது சம்பந்தமான கேள்விக்குத் தான் பதில் அளிக்கப்பட்டது. குறிப்பாக, ஒரு மாவட்டத்திற்கு மாத்திரமல்ல. ஆகவே, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அங்குள்ள சாத்தியக்கூறுகளையும், வாய்ப்புகளையும், பொருளாதார வசதிகளையும், மனதிற்கொண்டு அரசு பரிசீலிக்கும்.

திரு. க. மருதாசலம் : வசதியுள்ள இடங்களில் கலை அரங்கங்கள் கட்டுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோவை மாவட்டம் மிகச் சிறந்த மாவட்டம். வசதி

1980 பிப்ரவரி 4]

படைத்த மாவட்டம், அந்த மாவட்டத்தில் முதலில் கலை அரங்கம் கட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதைக் கலைவாணர் பெயரிலேயே கட்ட முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நான் முன்னாலே சொன்ன பதிலைத்தான் இதற்கும் சொல்லுகிறேன். வாய்ப்பு இருக்கும் இடங்களில் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கிறது. கட்டு கின்ற முடிவு எடுத்து கட்டி முடிந்த பிறகு யாருடைய பெயரை வைப்பது என்று பின்னால் பரிசீலிக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி: இதைப்போன்ற அரங்குகள் எல்லா மாவட்டங்களிலும் கட்டப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரை எந்தெந்த மாவட்டங்களில் கட்டப்பட்டிருக்கின்றன? எத்தனை ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்றன? எந்த நிதியிலிருந்து கட்டப்பட்டிருக் கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இப்போது வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பழைய திரையரங்கத்தை அரசு ஏற்றுக்கொண்டு அதைக் கலையரங்கமாக மாற்றியிருக்கிறது. அதைப் போல் நீலகிரி மாவட்டத் தலைநகரில் திறந்த வெளி அரங்கம் ஒன்று இருக்கிறது. அதையே கலையரங்கமாக மாற்ற முடியுமா என்று மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டிருக் கிறது. அது போன்ற எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிட மிருந்தும் அவர்களுடைய கருத்தை அரசு கேட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் வந்த பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ண கிரியில் அண்ணல் காந்தி அடிகள் நூற்றாண்டு மண்டபம் இருக் கிறது. அதைக் கலையரங்கமாக மாற்றி கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் வகையில் செய்தித் துறை மூலம் மாற்றியமைக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்த அரங்கம் அரசுக்குச் சொந்தமானதா அல்லது தனி அமைப்புக்குச் சொந்த மானதா என்று தெரியவில்லை. அரசுக்குச் சொந்தமானதாக இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்தைப் பெற்று மேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: மாவட்டத் தலைநகரங்களில் அரங்கம் கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரத்தில் எந்த ஊரில் கட்டப்படும்?

[1980 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : ஒவ்வொரு மாவட்டத் தலைநகர்கள் அல்லது முக்கியமான நகரங்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. கட்டுகின்ற முடிவு எடுக்கிறபோது பொது மக்களுக்கும் மாவட்டத்திற்கும் பயன்படும் வகையில் எங்கே அமைத்தால் பொருத்தமாக இருக்குமோ அங்கே அமைக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தமிழ்நாட்டில் இப்படி திரை யரங்குகளை நடத்துவதால் அரசுக்கு ஒன்றும் வருமானம் கிட்டப் போவதில்லை. ஆகவே, பத்திரிகை நிருபர்களுக்கும் எம்.எல். ஏக்களுக்கும் ஓசியில் படம் பார்க்க அரசு அனுமதிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பத்திரிகை நிருபர் களுக்காக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்கிற அந்த ஜாடையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இலவசமாக அனு மதிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். எந்தக் காட்சிகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாகக் காட்ட வேண்டு மென்று அரசு விரும்புகிறதோ அதற்கு எப்போதும் அரசு ஏற்பாடு செய்து கொண்டுதான் இருக்கிறது. அதற்காகக் கவலைப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 28.......

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே நான் பதிலளித்த கேள்வியில் மாண்புமிகு அரங்கநாதன் அவர்கள் கேட்ட துணைக் கேள்வியை நீக்கியதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு ஒரு விவாதமே நடைபெற்று அவர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அவை குறிப்பேட்டில் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அரங்கநாதன் பேசிய அனைத்தையும் நீக்கும்படி உத்தரவிட்டேன்.

சித்தேரி உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்.

*வினா எண். 28—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) அரக்கோணம் தாலுக்கா சித்தேரி கிராமத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டப்படுவதற்கு காண்டிராக்ட் விடப்பட்டு மேற்கூரை பிரிக்கப்பட்ட நிலையிலேயே இருப்பதை இந்த அரசு அறியுமா ?